# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044315

1. District : மாவட்டம் நாமக்கல் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு நாமக்கல் | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 07/AC/2021 | Date: நாள் 03.12.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act, 2018. | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 18.06.2021 | Date to : நாள் வரை மாலை 6.00 மணிக்கு
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 26.06.2021, 01.12.2021 | Time to : நேரம் வரை காலை சுமார் 7.00 மணிக்கு, காலை 10.00 மணிக்கு
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.12.2021, 03.12.2021 | Time : நேரம் காலை சுமார் 11.10 மணிக்கு, 16.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume: IV 03.12.2021 | Time : நேரம் 17.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் தென்மேற்கு மற்றும் வேலகவுண்டம்பட்டி காவல் நிலையம். சுமார் 10. கி.மீ மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.செல்வகுமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெரியசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கோழி பண்ணை தொழில் | (g) Address முகவரி செம்மாம்பாளையம், கூவன் காடு மாணிக்கம் அஞ்சல், திருச்செங்கோடு வட்டம் நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.S. சண்முகம், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், வேலகவுண்டம்பட்டி காவல் நிலையம், நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/12/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

03/12/21.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.12.2021 at 17.45 Hrs.

Name: பெயர் M. இராமச்சந்திரன்.
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
உ.நி.த.க. பிரிவு, நாமக்கல்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/AC/2021 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 03.12.2021-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 16.30 மணிக்கு காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் நிலைய அலுவில் இருந்த போது திரு.P.செல்வகுமார் (வயது-42), S/o.பெரியசாமி, செலம்பகவுண்டம்பாளையம், ஒடுவன்காடு, மானத்தி அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் P.செல்வகுமார் (வயது-42), த/பெ.பெரியசாமி, செலம்பகவுண்டம்பாளையம், ஒடுவன்காடு, மானத்தி அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நல்லிபாளையம், நாமக்கல். ஐயா, நான் கடந்த 2012-ஆம் வருடம் முதல் கதவு எண்.6/1 கனரா பேங்க் தெரு, சாமையன் நகர், LMW பிரிவு, பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்-20 என்ற முகவரியில் கோயம்புத்தூர் மாநகரில் குடும்பத்தாருடன் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் நாமக்கல் மாவட்டம் செலம்பகவுண்டம்பாளையம். எனது மனைவி பெயர் மாலதி. நான் 10-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கோயம்புத்தூரில் சொந்தமாக கோன் வைண்டிங் மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது நண்பர்கள் நல்லகுமரன்பாளையத்தைச் சேர்ந்த திரு.ராஜாமணி (எ) சம்பத், திரு.பிரபு, மாணிக்கம்பாளையத்தைச் சேர்ந்த திரு.செந்தில்குமார் ஆகியோர்களுடன் சேர்ந்து லத்துவாடி ஊராட்சி என்ற பெயரில் வாட்ஸ் ஆப்பில் குருப் ஆரம்பித்து பொதுமக்களுக்கு பயன்தரும் தகவல்களை பதிவிட்டு வருகிறோம். அந்த வாட்ஸ் ஆப் குருப்பில் நாங்கள் நால்வரும் அட்மின்-ஆக உள்ளோம். கடந்த 2020 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள்

எங்கள் லத்துவாடி கிராமத்தைச் சேர்ந்த மனநலம் குன்றிய சிறுமி சுமதி என்பவரை அதே ஊரைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் மற்றும் திரு.பழனியப்பன் ஆகிய இருவரும் பாலியல் வன்புணர்வு செய்தது சம்மந்தமாக பரமத்திவேலூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து கைது செய்தார்கள். லத்துவாடி கூத்தம்பூண்டி ஊராட்சி வார்டு கவுன்சிலர் திரு.M.சக்திவேல் என்பவர் அவர்களிடம் ரூ.7 லட்சம் பணம் பெற்றுக் கொண்டு அவர்களை வழக்கிலிருந்து விடுவிக்க அவர்களுக்கு சாதகமாக செயல்பட்டார் என்பது எங்களுக்கு தெரியவந்தது. அதனால் நாங்கள் வார்டு கவுன்சிலரின் தவறான செயலை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் விதமாகவும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நிவாரணம் கிடைக்கும் என்ற நல்ல நோக்கத்தில் எங்கள் வாட்ஸ் ஆப் குருப்பில் பதிவிட்டு பொதுமக்களுக்கு தெரியப்படுத்தினோம். அதனால் வார்டு கவுன்சிலர் திரு.M.சக்திவேல் அவர்கள் எங்கள் நால்வர் மீதும் வேலகவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் எங்கள் மீது FIR எண்.712/2020 ஆக கடந்த 20.09.2020-ஆம் தேதி வழக்கு பதிவு செய்தார்கள் என்ற விபரம் தெரிய வந்தது. மேற்படி திரு.பிரபு என்பவரை மட்டும் வேலகவுண்டம்பட்டி காவல் நிலைய SSI திரு.சண்முகம் அவர்கள் விசாரணை செய்து கைது செய்து ஜாமீனில் விட்டார். உங்கள் மீதும் புகார் உள்ளது, உங்களையும் விசாரிக்க வேண்டும் என்று சொல்லி எங்களை காவல் நிலையம் வருமாறு போனில் தகவல் தெரிவித்தார். நாங்கள் சம்மன் கொடுங்கள் என்று சொன்னோம். அதன்பிறகு அவர் எங்களை அழைக்கவில்லை. அதன்பிறகு நாங்கள் நாமக்கல் முதன்மை நீதிமன்றத்தில் முன்ஜாமீன் வாங்கினோம். கடந்த 23.10.2020-ஆம் தேதி முதல் நான், ராஜாமணி, செந்தில்குமார் ஆகியோருடன் வேலகவுண்டம்பட்டி காவல் நிலையம் சென்று 15 நாட்கள் தொடர்ந்து ஜாமீன் கையெழுத்து போட்டுவிட்டு வந்தோம். காவல் நிலைய இன்ஸ்பெக்டர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் எங்களை விசாரித்தார். SSI திரு.சண்முகம் அவர்களும் எங்களை விசாரித்தார். நாங்கள் மேற்படி நடந்த உண்மையை அவரிடம் சொல்லி சிறுமி சுமதிக்கு நியாயம் கிடைக்க வேண்டும்

என்பதற்காகத்தான் வாட்ஸ் அப்பில் அவ்வாறு பதிவிட்டோம் என்று சொல்லி எங்களை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டோம். SSI திரு.சண்முகம் அவர்கள் எங்களிடம் அந்த வழக்கின் IO நான் தான், என்னை தனியாக கவனித்துக் கொண்டால் வழக்கை MF செய்து உங்கள் மீது கேஸ் இல்லாமல் முடித்து விடுகிறேன் என்று சொன்னார். அதன்பிறகு கோவிட்-19 கொரானா லாக்டவுன் காரணமாக எந்த தகவலும் இல்லாமல் இருந்தது. கடந்த 18.06.2021-ஆம் தேதி கோயம்புத்தூரில் இருந்த போது SSI திரு.சண்முகம் அவர்கள் எனது செல்போன் 97862-22666 எண்ணிற்கு மாலை சுமார் 6.00 மணிக்கு நான் எனது பைக்கில் சென்று கொண்டிருந்த போது எனக்கு போன் செய்தார். அதனால் நான் அவரது செல்போன் 94421-83822 என்ற எண்ணிற்கு போன் செய்து பேசினேன். அவர் என்னிடம் என் மீதுள்ள வழக்கின் விசாரணை நிலை பற்றி சொல்லி எப்போது ஊருக்கு வருவீர்கள் என்று கேட்டார். நான் அவரிடம் லாக்டவுன் உள்ளதால் வருவதற்கு இன்னும் ஒரு வாரம் ஆகும் சார் என்று சொன்னேன். அதனால் ஊருக்கு வரும்போது எனக்கு ரூ.15,000/- பணம் கொண்டு வந்து கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான், சார் லாக்டவுன் காரணமாக தொழில் செய்யவில்லை, என்னிடம் அவ்வளவு பணம் இல்லைங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் லாக்டவுன் இன்னும் ஒரு வாரத்தில் முடிந்துவிடும், அப்போது பணம் ஏற்பாடு செய்து கொடுங்கள், அப்போது தான் உங்களுக்கு பிரச்சினையில்லாமல் கேஸை MF பண்ணி முடிக்க முடியும் என்று சொல்லிவிட்டு போனை கட் செய்துவிட்டார். பின்னர் கடந்த 26.06.2021-ஆம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு மேல் SSI திரு.சண்முகம் அவர்கள் எனக்கு போன் செய்து, எப்போது ஊருக்கு வருவீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் இன்னும் ஒரு வாரம் ஆகும் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் ஏற்கனவே கேட்ட பணத்தை கொடுத்தால் தான் உங்கள் மீதுள்ள கேஸை MF பண்ணி முடிக்கமுடியும் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லைங்க சார், பார்த்து கேஸை முடிச்சுக் கொடுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் உங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லாமல்

நான் பார்த்துக்கிறேன், அந்த கேஸ் IO நான் தான், சீக்கிரம் கேஸை முடிச்சு வைக்கிறேன், அதனால் ரூ.10,000/- பணம் கொடுத்துவிடுங்க, கேஸை நான் பார்த்துக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான், பார்த்து எங்களுக்கு நல்லது செய்யுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர், ஊருக்கு வரும்போது என்னை போலீஸ் ஸ்டேசன் வந்து பாருங்கள், நான் ஸ்டேசனில் இல்லையென்றால் போனில் கூப்பிடுங்கள் என்று சொன்னார். பின்னர் 30.09.2021-ஆம் தேதி சாயங்காலம் சுமார் 4.00 மணிக்கு என்னுடைய செல்போன் எண் 95852-22666-ல் இருந்து SSI திரு.சண்முகம் அவர்களின் செல்போன் எண் 94421-83822-க்கு கால் பண்ணி பேசினேன். அப்போது அவர் பணம் கொடுக்காமல் என்னை ஏமாற்றுகிறாயா என்று சொல்லி போனை கட் பண்ணிவிட்டார். பிறகு 01.12.2021-ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு வேலகவுண்டம்பட்டி போலீஸ் ஸ்டேசன் சென்று கையெழுத்து போடும்போது அங்கு வந்த SSI திரு.சண்முகம் அவர்கள் என்னிடம் ரூ.10,000/- கொடுத்தால் உங்களை கேஸிலிருந்து MF பண்ணுவேன் என்று சொன்னார். அதற்கு நான், தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், பிறகு வருவதாகவும் சொல்லிவிட்டேன். பின்னர் இன்று 03.12.2021-ஆம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு அவருடைய செல்போன் எண்ணிற்கு போன் செய்தேன். அவர் போனை எடுக்கவில்லை. பிறகு காலை சுமார் 11.10 மணிக்கு SSI திரு.சண்முகம் அவர்கள் அவருடைய மேற்படி செல்போனிலிருந்து எனக்கு போன் செய்து, ஏற்கனவே தான் கேட்ட பணத்தை கொடுக்குமாறும், தற்போது நாமக்கல்லில் இருப்பதாகவும், ரூ.10,000/- பணம் கொடுத்தால் தான் என் மீதுள்ள கேஸை MF பண்ணி முடிக்க முடியும் என்று கறாராக சொன்னார். மேலும் பணத்தை ரெடி பண்ணிவிட்டு சாயங்காலம் அவருக்கு போன் பண்ணும்படியும் சொன்னார். என்மீதுள்ள கேஸை MF பண்ணி முடிக்க என்னிடம் ரூ.10,000/- லஞ்சமாக கேட்கும் SSI திரு.சண்முகம் அவர்கள் மீது சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx P.Selvakumar) 3.12.21.

மேற்படி புகார் மனுவை பெற்று படித்துப்பார்த்தும், புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், வழக்கின் எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 03.12.2021-ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 07/AC/2021, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு அசல் ஆகியவற்றை மாண்பமை தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனிநீதிபதி, நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

03/12/21.
(M. இராமச்சந்திரன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.